அன்பான

புலம்பெயர் ஈழத்து தமிழ் உறவுகளே வணக்கம்

எனது பெயர் ச.சஜிகாந் இலங்கை நாட்டில் வவுனியா மாவட்டத்தில் வசித்து வருகிறேன். உங்கள் அனைவரிடமும் ஒரு உதவி நாடி இம் மடலை வரைகிறேன். அன்பான உறவுகளே நான் என்ன பாவம் செய்தேன் என்று அறியும் முன்னமே எனது இதயவால்வுகளை பறித்து விட்டான் ஆண்டவன் அதாவது நான் பிறந்தவுடனேயே இதயவால்வுகள் இயங்கமறுத்து விட்டன பிறந்து ஒன்பதாவது மாதத்தில் ஒரு சத்திரசிகிச்சை செய்து எனது கால் பகுதி இரத்த நாளம் ஒன்று எடுத்து இதயத்தில் பொறுத்தப்பட்டு இன்று வரை உயிர் வாழ்ந்து வருகிறேன்.

தற்போது எனது இதய வால்வு மீண்டும் இயங்க மறுக்கின்றது எனது உடம்பின் தட்ப வெப்ப நிலைகள் மாறுகின்றன. இதனால் கை, கால் இயங்க மறுக்கின்றது. மாலைப் பொழுதினில் எனது உடம்பு நீளநிறத்திற்கு மாறுகின்றது. வைத்தியர் கூறி விட்டார் உடனடியாக சத்திரசிகிச்சை செய்தால் உண்டு என்று இந்த சத்திரசிகிச்சைக்கு 6500டொலர் தேவை என்று வைத்தியர் கூறியுள்ளார்.

ஏற்க்கனவே எனது முதல் சத்திரசிகிச்சைக்கு எனது உறவினர்கள்,அயலவர்கள் தான் உதவினார்கள் தற்போது அவர்களின் சில பேரின் உதவியுடன் தான் தற்போதைய வைத்திய செலவுகளை பார்த்துக்கொள்கிறேன். உறவுகளே உங்களிடம் தயவுசெய்து கேட்டுக்கொள்வது எனது தற்போதைய சத்திரசிகிச்சைக்கு 6500டொலர் தேவைப்படுகின்றது. இதில் 1090 டொலர் கொழும்பு வைத்தியசாலை மூலமாக ஜனாபதி உதவிதொகையிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது.(இத் தொகை குறிப்பிட்ட காலத்திற்குள் சத்திரசிகிச்சை செய்யாவிடில் மீளப்பெற்றுக்கொள்ளப்படும்)உறவுகளே மேலதிகமாக தேவைப்படும் தொகையை ஈழத்து உறவுகளாகிய நீங்கள் தந்து உதவுவிர்களாயிருந்தால் மலரப்போகும் ஒரு புதிய உலகத்தை நானும் உங்களுடன் சேர்ந்து கண்டு களிப்பேன். உங்களின் ஒருவனாக இருந்தே இவ்உதவியை உங்களிடம் கேட்க்கிறேன்.உங்களின் ஒவ்வொருவரின் பங்களிப்பிலும் தான் எனது உயிர் தங்கியுள்ளது என்பதை மறவாதீர்களே உறவுகளே!

அன்புடன்--சஜிகாந்

அன்பான உறவுகளே

மேற்க்கூறப்பட்ட விடயம் தொடர்பாக நாங்கள் ஒரு சிறு விளக்கம். தரலாம் என்று எண்ணுகிறோம் ' தற்போதைய வைத்திய தேவைக்காக 6500டொலர் தேவைப்படுகின்றது அதற்கான ஆவணங்கள் சேர்கப்பட்டுள்ளது .இவரது முந்தைய சத்திரசிகிச்சைக்கு உறவினர்கள், அயலவர்கள் என நாம் தான் உதவி செய்தோம் தற்போது அனைவருமே காலத்தின் கொடுமையால் பிரிந்து விட்டோம்., இருந்தாலும் ஓரிருவரால் தற்போதைய வைத்திய செலவுக்காக உதவிசெய்து கொண்டுதான் இருக்கிறோம். இவரது இந்த சத்திரசிகிச்சைக்கு யு.என்.எச்.ஆர் ' நிறுவனம் உதவி செய்வதாக அறிவித்திருந்தார்கள் ஆனால் தற்போது வன்னிப்பேரவலத்தால் முழுக்கவனமும் அதில் திரும்பி இருப்பதால் நாம் அவர்களை இடைஞ்சல் படுத்த விரும்பவில்லை ஏனெனில் அது எவ்வளவு பெரிய கடமை என்பது எம் அனைவருக்கு புரியும். எனவே தான் ஈழத்து புலம்பெயர் உறவுகளிடம் இந்த உதவியை கேட்பது என்ற முடிவுக்கு வந்துள்ளோம். உறவுகளே உயிர் என்பது எவ்வளவு பெரிய சொத்து என்பது எம் அனைவருக்கும் தெரியும் எனவே தயவு செய்து இந்தப்பாலகனை காப்பாற்ற புலம்பெயர்தமிழ் உறவுகள் உதவுவீர்கள் என நம்புகிறோம். ' ஏற்கனவே எம் மூலமாக செய்யப்பட்ட செலவுகள், தற்போது தேவைப்படும் பணம். பற்றிய விபரங்கள் போன்ற ஆவணங்கள் இங்கே தரப்பட்டுள்ளது. உறவுகளே நீங்கள் உதவி செய்யவிரும்பினால் கீழ்காணும் கணக்கு இலக்கங்களுக்கு உதவி தொகையை வைப்பிடலாம். ---- அன்புடன்--செந்தூர்--

க.இலக்கம் –st\88\00601(தேசிய சேமிப்பு வங்கி---இலங்கை)

பெயர்-ராமராஜ் வனிதா. (0094775069277)---rvanitha833@gmail.it

க.இலக்கம்- IT 33 Q 02008 66500 000040494412 (unicredit bank—italy)

பெயர்--புண்ணியமூர்த்தி,செந்தூரன்(0039-05221532754)punniyamoorthys@yahoo.it